இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 122 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 26 – வெள்ளிக்கிழமை 12 டிசம்பர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 122 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 26 - Friday 12 December 2025 - Dak 12 Pages ₹ 5.00

## பெண்களின் முன்னேற்றத்தினை மையமாகக் கொண்ட புரட்சிகரமான

# “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” திட்டம் 2-ஆவது கட்ட விரிவாக்கம்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.12.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், தாராபுரம் மற்றும் காங்கேயம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, டிச.12-**

**‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் இன்று (டிசம்பர் 12) சென்னை - நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2-வது கட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

அதன் விவரம் வருமாறு:-

இந்த விரிவாக்க நிகழ்வின் ஒரு பகுதியாக, ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ என்ற தலைப்பில் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் பெண்கள் நலனுக்காக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களின் சாதனைகள் எடுத்துரைக்கப்படும். இந்த நிகழ்ச்சியில் காந்தியவாதியும் சமூக ஆர்வலருமான திருமதி. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் மற்றும் பாராலிம்பிக்ஸ் பதக்கம் வென்ற செல்வி. துளசிமதி முருகேசன் போன்ற முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கின்றனர். முதல் கட்டமாக 1,13,75,492 பெண்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கடந்த மார்ச் 27, 2023 அன்று சட்டமன்றத்தில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ குறித்து அறிவித்தார். இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியான பெண்களுக்கு மாதந்தோறும் 1,000 அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. முதல் கட்டமாக 1,13,75,492 பெண்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்தத் திட்டம் மேலும் விரிவாக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இந்த இரண்டாம் கட்ட விரிவாக்கம் நடைபெறுகிறது.

### வெல்லும் தமிழ் பெண்கள்

இன்று (டிசம்பர் 12) நடைபெறும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ நிகழ்ச்சியில், ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ மட்டுமின்றி, ‘நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம்’, ‘விடியல் பயணம்’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’, ‘நலம் காக்கும் ஸ்டாலின்’, ‘தோழி விடுதிகள்’ போன்ற பல்வேறு நலத் திட்டங்களால் பயனடைந்த பெண்களின் அனுபவப் பகிர்வுகள் இடம்பெறும். இது பெண்களின் வாழ்வில் ஏற்பட்ட நேர்மறையான மாற்றங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒரு நிகழ்வாக அமையும்.

### அன்றாடத் தேவைகள்

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை மேம்படுத்துவதும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் ஆகும். மாதந்தோறும் 1,000 என்பது பெண்களுக்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும். இது அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சிறு சேமிப்புகளை மேற்கொள்ளவும், குழந்தைகளின் கல்விக்கு உதவவும் வழிவகுக்கும். மேலும், இது பெண்களின் தன்னம்பிக்கையை அதிகரித்து, சமூகத்தில் அவர்களின் நிலையை வலுப்படுத்தும்.

### புரட்சிகரமான திட்டம்

‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ என்பது ஒரு புரட்சிகரமான திட்டம். இது பெண்களை மையமாகக் கொண்ட ஒரு விரிவான நலத்திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம், பெண்கள் பொருளாதார ரீதியாக வலுப்பெற்று, குடும்பத்திலும் சமூகத்திலும் முக்கியப் பங்கு வகிக்க முடியும். இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கம், மேலும் பல பெண்களுக்கு இந்த நன்மைகளைப் பெற்றுத் தரும். இது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும்.

### உதயநிதி ஸ்டாலின்

பெண்களின் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றம் என்பதை உணர்ந்து, அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ அதன் ஒரு முக்கிய அங்கமாகும்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

# கேரளாவில் துணைவேந்தர்கள் நியமனம்!

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

புதுடெல்லி, டிச.12-

கேரளாவில் பல கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர் நியமிக்கும் விவகாரத்தில், ஆளுநர் உடன்படாததால் உச்சநீதிமன்றமே துணைவேந்தர்களை நியமிக்க இருப்பதாக நீதிபதிகள் அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர்.



கேரளாவில் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும் விவகாரத்தில் அம்மாநில முதலமைச்சரின் கருத்தை ஆளுநர் ஏற்கவில்லை. இதனால், துணைவேந்தர் நியமனத்தில் தேடுதல் தேர்வுக்குழு அமைத்து, தலைவராக முன்னாள் நீதிபதி சுதான்சு துலியாவை உச்சநீதிமன்றம் நியமித்திருந்தது. இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் துணை வேந்தர்கள் பெயர்களை தேர்வுக்குழு பரிந்துரைத்தும், வேந்தரான கேரளா ஆளுநர் இன்னும் முடிவெடுக்காமல் தாமதம் செய்தார்.

இதுகுறித்து கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் இருதரப்பு வாதங்களும் நிறைவுபெற்றது. இந்த நிலையில், இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர் நியமிக்கும் விவகாரத்தில் ஆளுநர் உடன்படவில்லை என்பதால், துணை வேந்தர்களை உச்சநீதிமன்றமே நியமிக்க உள்ளதாக நீதிபதிகள் அறிவித்துள்ளனர். இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் தலா ஒரு பெயரை இறுதிசெய்து, வரும் 17ஆம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய தேர்வுக்குழுவுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

## எஸ்.ஐ.ஆர். விவாதம்:

### அமித் ஷா பயந்துவிட்டார்: ராகுல் காந்தி பேட்டி!

டெல்லி, டிச.12-

நாடாளுமன்றத்தில் எஸ்.ஐ.ஆர். விவாதத்தின் போது நேற்று நான் இடைமறித்து பேசியதில் அமித் ஷா பயந்துவிட்டார் என ராகுல் காந்தி பேட்டி அளித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அமித் ஷா பதற்றத்துடன் இருந்தார். அவரின் கைகள் நடுங்கின, நீங்கள் கண்டிருப்பீர்கள். அமித் ஷா நாடாளுமன்றத்தில் தவறான வார்த்தைகளை



பிரயோகப்படுத்தினார். அமித் ஷா பெரும் மன அழுத்தத்தில் இருந்ததை நாடே பார்த்தது என்று ராகுல் காந்தி பேட்டி அளித்தார்.

## 2035க்குள் இந்திய விண்வெளி நிலையம்!

நெல்லை, டிச.12-

நெல்லையில் உள்ள கடற்படை செயற்கைக் கோள் தகவல் தொடர்பாகத்தில் இஸ்ரோ தலைவர் நாராயணன் நேற்று அளித்த பேட்டி வருமாறு:-

பாரதப் பிரதமரின் அறிவிப்புப்படி 2035க்குள் இந்திய விண்வெளி நிலையம் அமைக்கப்படும். மொத்தம் 5 தொகுதிகள் கொண்ட இதில், முதல் தொகுதி 2028ல் விண்ணில் ஏவப்படும். நெல்லை அருகே குலசேகரன்பட்டினம் ஏவுதளப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 2027 தொடக்கத்தில் அங்கிருந்து ராக்கெட் ஏவப்படும். இது ஹரிகோட்டாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் 2வது முக்கிய ஏவுதளமாக அமையும். மேலும், நிலவில் இறங்கி அங்கிருந்து மண் மாதிரிகளை பூமிக்குக் கொண்டுவரும் சந்திரயான் 4 திட்டத்திற்கான பணிகளும் மும்முரமாக நடந்து வருகின்றன என்றார்.

# எஸ்.ஐ.ஆர்., வழக்கில் ஜனவரி மாத இறுதியில் தீர்ப்பு!

## உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

புதுடெல்லி, டிச.12-

எஸ்.ஐ.ஆர்., வழக்கில் இந்த மாதத்துக்குள் வாதங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டு, ஜனவரி மாத இறுதியில் தீர்ப்பு வழங்கப்படும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

பீகாரை தொடர்ந்து தற்போது தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி உட்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், பல மோசடிகள் நடைபெறுவதாக இந்தியா கூட்டணி கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன.

உரிய கால அவகாசம் அளிக்காமலும், அவசர, அவசரமாகவும் எஸ்.ஐ.ஆர்., பணிகள் மேற்கொள்ளப்படுவதால் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளன. எஸ்.ஐ.ஆர்., படிவங்கள் தொடர்பாக மக்களிடம் பல்வேறு சந்தேகங்கள் உள்ளதாக தெரிவித்துள்ள இந்தியா கூட்டணி கட்சிகள், இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் தொடர்ந்துள்ளன.

இந்த வழக்குகள் மீது விசாரணை நடைபெற்று வரும் நிலையில், ஒன்றிய அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உச்சநீதிமன்றம் சரமாரியாக பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகிறது.

இந்நிலையில், எஸ்.ஐ.ஆர்.,க்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, (Gfx in) எஸ்.ஐ.ஆர்., தொடர்பாக புதிய வழக்குகள் இனி அனுமதிக்கப்படாது என்று நீதிபதிகள் அறிவித்தனர். எஸ்.ஐ.ஆர்., தொடர்பாக தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்கள் தொடர்ந்த வழக்குகள் மீது, வரும் 17 ஆம் தேதி விசாரணை நடைபெறும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

ஆனாலும் பொதுவான பிரச்சினைகளின் மீதான வாதங்களில் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் தங்களது கருத்தை தெரிவிக்கலாம் என்றும், S.I.R. வழக்கில் இம்மாதத்துக்குள் வாதங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டு, ஜனவரி மாதம் இறுதியில் தீர்ப்பு வழங்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

## ஆதார் பெயர் மாற்றத்திற்கு பான் கார்டை ஆவணமாக ஏற்றுக் கொள்ள முடியாது!

புதுடெல்லி, டிச.12-

நாட்டின் முக்கிய ஆவணமாக உள்ள ஆதார் அட்டையை ஒன்றிய அரசின், இந்திய தனித்துவ அடையாள ஆணையம் வழங்கி வருகிறது. ஆதார் அட்டையில் பெயர், புகைப்படம், பிறந்த தேதி, முகவரி உள்ளிட்டவை மாற்றம் செய்வதற்கு ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளை மக்கள் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஆதார் அட்டையில் உள்ள பெயரில் திருத்தம் செய்வதற்கு, பான் கார்டை ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், பான்கார்டு ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் திடீர் அறிவிப்பால், பொதுமக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

## தமிழ்நாட்டில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 75,035ஆக அதிகரிப்பு!

சென்னை, டிச.12-

தமிழ்நாட்டில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை 75 ஆயிரத்து 35 ஆக அதிகரித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், மாநிலம் முழுவதும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கான முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் இன்று முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாவட்ட தேர்தல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட இறுதி செய்யப்பட்ட வாக்குச்சாவடிகளின் பட்டியல், தலைமை தேர்தல் அதிகாரியின் அலுவலகம் மூலம் இந்திய தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது என்று தெரிவித்தார்.

இந்நிலையில், வாக்குச்சாவடிகளின் இறுதிப் பட்டியல் இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்புக்கு முன், மாநிலத்தில் 68 ஆயிரத்து 467 வாக்குச்சாவடிகள் இருந்தநிலையில், தற்போது 75 ஆயிரத்து 35 வாக்குச்சாவடிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கான முதல் நிலை சரிபார்ப்பு பணிகள், ஜனவரி 24ம் தேதி வரை நடைபெறும் என்றும், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் சரிபார்ப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன. அரசியல் கட்சிகளிடம் இருந்து பிரதிநிதிகள் பெயர் பெறப்பட்டு அவர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.